# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2018

| தரம் -07 | செயன்முறைத்தொழிநுட்பம் | நேரம் : 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) வீட்டுத் தோட்டம் செய்வதனால் கிடைக்கும் முக்கிய பயன்களில் ஒன்று.
   1. நச்சுப்பதார்த்தங்களற்ற உணவு வகைகள் கிடைத்தல்.
   2. அயலவருக்கும் உணவு வழங்க முடியும்.
   3. மீன், இறைச்சி உண்ண வேண்டிய அவசியமில்லை.
   4. ஏற்றுமதி வருமானம் கிடைக்கும்.

2) மண்ணரிப்பைத் தடுக்கும் உயிரற்ற தடைக்கு உதாரணம்.
   1. பொன்னாங்கணி 2. வல்லாரை 3. வெள்ளரி 4. கற்கள்

3) சிதைவடையாத கழிவுப் பொருட்களை முகாமை செய்யும் எண்ணக்கரு.
   1. கூட்டெரு தயாரித்தல் 2. உயிர்வாயு தயாரித்தல்
   3. 3 "R" எண்ணக்கரு 4. S.L.S எண்ணக்கரு


Education கல்வி


4) நடுவதற்குப் பொருத்தமான தண்டுத்துண்ட வகை.
   1. பவன் வயிரத் துண்டம் 2. நடுத்தர முதிர்ச்சி கொண்ட துண்டம்
   3. இளம் தண்டுத் துண்டம் 4. வேர்த்துண்டம்

5) கோவா, சலாது இலை போன்ற உணவுப்பொருட்களைக் கழுவி நீரை வடிய விடப் பயன்படும் உபகரணம்.
   1. கோப்பை 2. கொலண்டர் 3. கிண்ணம் 4. புனல்

6) கேக் கலவை அல்லது அமிலம் சேர்ந்த மூலப்பொருட்களை கலப்பதற்கு பொருத்தமான உபகரணம்.
   1. சில்வர்கரண்டி 2. உலோகக் கரண்டி 3. மரக் கரண்டி 4. ஒட்டாத கரண்டி

7) இலத்திரனியால் கூறான மின் மோட்டரின் குறியீடு.

1. 

2. 


3. 

4. 

8) விலை அதிகரிக்கும் போது பொருளுக்கான கேள்வித் தொகை.
   1. அதிகரிக்கும் 2. குறைவடையும்
   3. மாற்றம் ஏற்படாது 4. சாதாரணமாகவே காணப்படும்

9) இலங்கைத் தரக் கட்டளை பணியகத்தின் மூலம் வழங்கப்படும் தரச் சான்றிதழ் குறியீடு.
   1. I.S.O 2. வியாபாரக் குறியீடு 3. S.L.S 4. கம்பனிச் சட்டம்

10) தரையலங்கரிப்பில் பயன்படுத்தப்படும் மென்கூறுகளில் ஒன்று.
1. பாரிய மரங்கள் 2. பூச்சாடிகள் 3. பூங்காவன விளக்கு 4. இருக்கைகள்

11)  தரையலங்கரிப்புத் திட்டப்படத்தில், கேத்திரகணித நியமக்குறியீடு குறிப்பிடுவது,
1. நீர்த்தடாகம் 2. கட்டடம் 3. இருக்கை 4. பூங்காவனக்குடை

12) வீடு அல்லது பாடசாலைகளில் சேரும் எல்லா வகையான சிதைவடையத்தக்க கழிவுகளையும் கூட்டெருவாக்கப் பொருத்தமான கூட்டெரு தயாரிப்பு முறை.
1. குவியல் முறை 2. குழிமுறை 3. பொதியிடல் முறை 4. அடைப்புமுறை

13) பழங்களிலிருந்து பிரித்தெடுத்த வித்துக்களை உலர்த்தும் போது ஆரம்பத்தில் வழங்கவேண்டிய சூழல் நிலைமை.
1. சாதாரண வெயில்
2. மிதமான வெயில்
3. கடும் வெயில்
4. காற்றுடன் கூடிய வெயில்

14) மழைநீரினால் மண்ணின் வளமான மேற்படை கழுவி அகற்றப்படல்.
1. மண்வளம் 2. மண்ணரிப்பு 3. மண்சரிவு 4. நீர்வடிப்பு

15) மிளகுடன் கலப்படம் செய்யும் பொருள்.
1. குரக்கன் 2. பயறு 3. உழுந்து 4. பப்பாசி விதை

16) மின் தற்காலிகமாக களஞ்சிப்படுத்தி வைக்கப்படுவது,
1. ஆளியில்
2. உலர் மின்கலத்தில்
3. மின்குமிழில்
4. கொள்ளளவியில்

17) நன்கு உலர்ந்த நெற்றுக்களிலிருந்து வித்துக்களைப் பெறும் அறுவடைப் பயிர்.
1. தக்காளி 2. கத்தரி 3. பப்பாசி 4. வெண்டி

18) தடையிகளின் தடைப்பெறுமானம் கணிக்கப்படும் அளவீட்டின் அலகு.
1. வோல்ற் (v) 2. ஓம் ($\Omega$) 3. வற் (w) 4. அம்பியர் (A)

19) தரையலங்கரிப்பின் நோக்கங்களில் ஒன்று அல்லாதது.
1. நிழலைப் பெற்றுக் கொள்ளல்
2. உளத்திருப்தியைப் பெறல்
3. கவர்ச்சிகரமற்ற விடயங்களை மறைத்தல்
4. பணத்தை முதலீடு செய்தல்.

20) பாதுகாப்பான கொடுக்கல் வாங்கலுக்காக இன்று அதிகமானோர் பயன்படுத்தும் சாதனம்.
1. தங்கம்
2. பணம்
3. இலத்திரனியல் அட்டை
4. வெளிநாட்டு நாணயம்.

(1 x 20 = 20 புள்ளிகள்)

## பகுதி – II

- ❖ முதலாம் வினா உட்பட வேறு இரு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை தருக.
- ❖ தேவையான விடத்து விளக்கப்படங்களுடன் விடையளிக்கவும்.
- ❖ சுருக்கமான விடை தருக.

01)

1) முதலாம் தவணையில் நீர் செய்த கணிப்பீட்டின் தலைப்பை எழுதுக?
2) இக் கணிப்பீட்டின் வகையினைக் குறிப்பிடுக?
3) கணிப்பீட்டின் போது பயன்படுத்திய கருவி உபகரணங்கள் இரண்டை எழுதுக.
4) கணிப்பீட்டிற்குப் பயன்படுத்திய பொருட்கள் யாவை?
5) கணிப்பீட்டின் போது எதிர்நோக்கிய பிரச்சினைகள் யாவை?

(2x5=10 புள்ளிகள்)

02)

1) தரையலங்கரிப்பு மேற்கொள்ளப்படும் இடங்கள் யாவை?
2) தரையலங்கரிப்பு செய்யப்படுவதன் நோக்கங்கள் இரண்டு தருக?
3) தரையலங்கரிப்பில் பயன்படுத்தப்படும் வன்கூறுகள் யாவை?
4) தரையலங்கரிப்பில் நிறுவப்படும் மென் கூறுகள் எவை?
5) தரையலங்கரிப்புத் திட்டப்படமொன்று வரையும் போது பயன்படுத்தப்படும் கேத்திர கணித வடிவங்கள் இரண்டு குறிப்பிடுக?

(2x5=10 புள்ளிகள்)

03)

1) சந்தை என்றால் என்ன?
2) ஒரு சந்தையின் அடிப்படைப் பண்புகள் இரண்டு குறிப்பிடுக.
3) நீங்கள் சூழலில் காணும் சந்தை நடவடிக்கைகளுக்கு இரு உதாரணம் எழுதுக.
4) சந்தையில் இடம்பெறும் மோசடிகள் இரண்டு குறிப்பிடுக.
5) பணத்திற்குப் பதிலாக கொடுக்கல் வாங்கலுக்குப் பயன்படுத்தும் வேறு வழிமுறைகள் இரண்டு குறிப்பிடுக?

(2x5=10 புள்ளிகள்)

04)

1) வீட்டுத் தோட்ட மண் வளமற்றுப் போவதற்கான காரணங்கள் இரண்டு குறிப்பிடுக?
2) மண்ணரிப்பைத் தடுப்பதற்கான உயிர்த்தடைகளை ஏற்படுத்தப் பொருத்தமான தாவரங்கள் இரண்டு குறிப்பிடுக?
3) பயிர் நிலத்தில் சேரும் சிதைவடையாத கழிவுப் பொருட்கள் இரண்டு எழுதுக?
4) உணவு தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் மூலப்பொருட்களைத் தெரிவு செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் இரண்டு தருக?
5) அன்றாடம் நாம் பயன்படுத்தும் இலத்திரனியல் துணைக் கூறுகள் இரண்டு குறிப்பிடுக?

(2x5=10 புள்ளிகள்)

Education
கல்வி
අධ්‍යාපන
kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Kalvi.lk

Whatsapp
075 287 1457